DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.373/2022**

Cross Examination of Witness

15.12.2022

**அ.சா.1 - சுசீலா**

மனுவின்பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1) என்னைப் பெற்ற அப்பா பெயர் சின்னப்பகவுண்டர் என்றால், சரிதான். எனக்கு பச்சமுத்து, அங்கமுத்து என்கிற தங்கராஜ் என்ற இரண்டு சகோதரரர்கள் உள்ளார்கள் என்றால், இல்லை, அவர்கள் இருவரும் சின்னப்பகவுண்டரின் மகன்கள். என்னைப் பெற்ற சின்னப்பகவுண்டரின் தம்பி தான் குருசாமி என்றாலும், பிறந்த முறைக்கு அவர் எனது சித்தப்பா என்றாலும், சரிதான். மேற்படி சின்னப்பகவுண்டர், அவரது சகோதரர் குருசாமிக்கவுண்டரின் ரேகையை பொய்யாக வைத்து, அவரது மகன்கள் பச்சமுத்து மற்றும் அங்கமுத்து என்கிற தங்கராஜ் பெயரில் பொய்யான உயிலை தயார் செய்ததாக 1 வது எதிரி குருசாமி தாக்கல் செய்த வழக்கு CC.374/2022 என்ற பெயரில் நிலுவையில் உள்ளது என்றால், அது குறித்து எனக்கு எந்தத் தகவலும் தெரியாது.

2) மேற்படி சின்னப்பகவுண்டர் எனது அப்பா என்றாலும், மேற்படி பச்சமுத்து, அங்கமுத்து ஆகியோர் எனது சகோதரரர்கள் என்றாலும், எனக்கு மேற்படி வழக்கு விவரங்கள் தெரியும் என்றாலும், தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. மேற்படி சின்னப்பகவுண்டரின் தம்பி குருசாமிதான் இவ்வழக்கின் 2 வது எதிரி மாரியம்மாளை திருமணம் செய்து கொண்டார் என்றால், சரிதான். நான் பூலாம்பட்டியில் எனது குடும்பத்துடன் 30 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். எனது சித்தப்பா குருசாமி வாழ்ந்தது கள்ளாங்காட்டுத் தோட்டம் என்றால், சரிதான், அவர் எனது அப்பா ஆவார். எனது அப்பா ஊரிலும், எனது உறவினர்கள் மத்தியிலும் நிறைய பெயர்கள் குருசாமி என்று உள்ளது என்றால், சரிதான். எங்கள் ஊரில் நிறைய பேருக்கு குருசாமி என்று பெயர் இருப்பதால் மேற்படி சின்னப்பகவுண்டரின்

சகோதரர் குருசாமியை, சின்ன வயதில் இருந்தே சின்னத்தம்பி என்றுதான் அழைப்பார்கள் என்றால், சரியல்ல. அவ்வாறு சரியல்ல என்று வழக்கிற்காக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல, அவருக்கு ஒரே பெயர் குருசாமி தான்.

3) எனது அப்பாவின் தம்பி குருசாமிக்கும், இரண்டாவது எதிரிக்கும் பிறந்தவர் தான் 1வது எதிரி குருசாமி என்றால், சரியல்ல, அவர் சின்னத்தம்பிக்கு பிறந்தவர். என்னைப் பெற்ற அப்பா சின்னப்பகவுண்டரின் சகோதரரான குருசாமியும், சின்னத்தம்பி என்பவரும் ஒன்றுதான் என்றால், சரியல்ல. இரண்டாவது எதிரியும், அவரது கணவர் குருசாமியும் திருமணத்திற்கு பிறகு சுமார் 2 ஆண்டுகள் ஒன்றாக இருந்தார்கள் என்றால், சரியல்ல. அந்த சமயத்தில் அவர்களுக்கு பிறந்தவர்தான் 1வது எதிரி குருசாமி என்றால், சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக திருமணத்திற்கு பிறகு இரண்டாவது எதிரி எண்ணெய்த் தேய்ப்பிற்காக சென்றவர் அதன் பிறகு திரும்பவில்லை என்று தவறாக சொல்லுகிறேன் என்றால், சரியல்ல. மாரியம்மாளுக்கும், சின்னத்தம்பி என்பவருக்கும், அவரது திருமணத்திற்கு முன்பே தொடர்பு இருப்பதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.8 அறிவிப்பு இந்த வழக்கிற்காக என்னால் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அதுபோன்ற அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால், சரியல்ல. மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டது என்பதற்கோ, அதை இரண்டாவது எதிரி பெற்றுக் கொண்டார் என்பதற்கோ ஆதரவாக எந்த வித ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

4) ம.சா.ஆ.9ன்படி 1வது எதிரியின் பிறந்த தேதி 01.04.1977 என்றால், சரிதான். 30.12.1996ம் தேதி 2வது எதிரிக்கும், குருசாமி என்பவருக்கும் ஏற்பட்ட திருணமத்தை ரத்து செய்து ஒரு ஒப்பந்த பத்திரம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், அது பொய்யாக ஏற்படுத்தப்பட்ட பத்திரம் ஆகும். மேற்படி பத்திரத்தை குருசாமி என்பவரும், இரண்டாவது எதிரியும் இணைந்து பதிவு செய்துள்ளார்கள் என்றாலும், அதில் உள்ள ரேகை மேற்படி குருசாமி என்பவருடையதுதான் என்றாலும், சரியல்ல. அந்த ஆவணத்தின் எண்.77/1996 என்றால்,

சரிதான். அன்றைய தினமே 1 வது எதிரியும், குருசாமி என்பவரை அவரது தகப்பனாராக காட்டி பொதுப்பாக பாத்திய விடுதலைப் பத்திரம் ஒன்றைப் பதிவு செய்துள்ளார் என்றால், அது பொய்யான பத்திரம் ஆகும். அதே தேதியில் 2 வது எதிரியும், அவரது கணவர் குருசாமியும் இணைந்து ஜீவானாம்ச பத்திரம் ஒன்றை எழுதி பதிவு செய்துள்ளார் என்றால், அது தவறாகும், அது பொய்ப் பத்திரம் ஆகும். மேற்படி மூன்று பத்திரங்களும், 1, 2 எதிரிகளும், இரண்டாவது எதிரியின் கணவர் குருசாமி ஆகிய மூவரும் சேர்ந்து அம்மாபேட்டை சார்பதிவளார் அலுவலகத்தில் தயாரித்து பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் என்றால், சரியல்ல, அது பொய்யான ஆவணங்கள் ஆகும். மேற்படி 3 பத்திரங்களும், மேற்படி மூவரின் சம்மதத்துடன் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் என்றால், சரியல்ல, அது அவர்களாகவே ஏற்படுத்திக் கொண்ட பொய்ப் பத்திரம் ஆகும்.

5) மேற்படி ம.சா.ஆ.15 ல் உள்ள கைரேகை, மேற்படி சின்னப்பகவுண்டரின் தம்பி குருசாமி என்பவரின் கைரேகை என்றால், சரியல்ல. ஆணைக்கவுண்டனூரில் உள்ள என்னைத் தத்து எடுத்துக் கொண்டதாக கூறப்படும் அக்கினி மாரியம்மன் கோவில் பெரிய பிரபலமான கோவில் ஆகும். அது அரசுக்கு சேர்ந்ததா என்றால், அது எனக்குத் தெரியாது. மேற்படி கோவிலில் என்னை குருசாமி மகளாக தத்து எடுத்துக் கொண்டதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை, சாட்சிகள் தான் உள்ளனர். குருசாமி என்னை மகளாக எப்போதும் தத்து எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும், தத்து எடுத்துக் கொண்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. அவர் என்றைக்கும் எனக்கு மகளாக அங்கீகாரம் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல, அவர் உயிரோடு இருந்தவரை என்னை மகளாகத்தான் நினைத்தார். வழக்கு சம்பந்தப்பட்ட சொத்தை எனக்குத்தான் தரவேண்டும் என்று அவர் நினைத்துக் கொண்டிருந்தாரா என்றால், ஆமாம், நினைத்துக் கொண்டிருந்தார்.

6) வழக்கு சம்பந்தப்பட்ட சொத்தை எனக்கு கொடுப்பதாக உயிலோ அல்லது தானமோ அவர் ஏற்படுத்தவில்லை என்றால், சரிதான். எங்கள் குடும்பத்தில் நான் பெண்ணாக பிறந்ததால் அவர் என் மீது அன்பு காட்டியது உண்மை என்றும், ஆனால் அவர் ஒரு போதும் என்னை மகளாக தத்து எடுக்கவில்லை என்று சொன்னாலும், சரியல்ல,

என்னை அவர் மகளாக தத்து எடுத்தது உண்மை. எனது பெற்ற அப்பா சின்னப்பகவுண்டருக்கு விவரம் போதாததால் என்னைப் பள்ளியில் சேர்க்கும்போது எனது தந்தை பெயர் குருசாமி என்று தவறுதலாக எழுதப்பட்டு விட்டது என்றால், சரியல்ல. ம.சா.ஆ.5 ன்படி எனது பிறந்த தேதி 07.03.1969 என்றால், சரிதான். என்னை தத்து எடுத்த தேதி என்ன என்றால், தேதி தெரியவில்லை, ஆனால் 1975 ம் ஆண்டு தத்து எடுத்தார். இந்த வழக்கில் என்னை தத்து எடுத்ததாக சொல்லப்படும் தேதியை நான் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால், சரியல்ல, வருடத்தைச் சொல்லியுள்ளேன்.

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் கோரப்பட்டதால், குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**